# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 96 /2016**

திரு. R. வெங்கட்ராமன்,
த/பெ ராஜகோபால்,
R.V.R. பண்ணை,
R.V.R. இல்லம்,
1,2 & 3, திருமலை தெரு,
ஜெய் பாலாஜி நகர்,
கே.கே. நகர்,
சென்னை – 600 078. . . . .. மேல் முறையீட்டாளர்
(திரு. ஆர். வெங்கட்ராமன்)

எதிர்

1. உதவி பொறியாளர் / இ&பரா/பந்தநல்லூர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1/11, மெயின் ரோடு, காவானூர்,
பந்தநல்லூர் – 609 802.

2. உதவி செயற் பொறியாளர் / இ&பரா/வடக்கு/கும்பகோணம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருவிடை மருதூர் சாலை, ராஜன் தோட்டம்,
கும்பகோணம் – 612 001.

3. செயற் பொறியாளர் / இ&பரா/வடக்கு/கும்பகோணம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருவிடை மருதூர் சாலை, ராஜன் தோட்டம்,
கும்பகோணம் – 612 001. . . . . எதிர்மனுதாரர்

(திரு. சி. இளஞ்செல்வன், உதவி செயற்பொறியாளர்/வடக்கு/கும்பகோணம்,
திரு. எஸ். கல்யாணசுந்தரம்/இளநிலை பொறியாளர்/பந்தநல்லூர்)

**<u>கேட்புரை நாள் : 21–2–2017</u>**

**<u>ஆணை நாள் : 02.06.2017</u>**

திரு. R. வெங்கட்ராமன், கே.கே. நகர், சென்னை–78 அவர்களின் 29.11.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 96/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.2.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

அவருடைய மனுவிலுள்ள குறைகளையும் கோரிக்கைகளையும் தீர விசாரணை செய்து தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம் :</u>**

2.1 மேல்முறையீட்டாளர் வன்னிக்குடி கிராமத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடை பற்றி தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 2.3.10 அன்று online மனு செய்துள்ளார்.

2.2 9.8.2016 அன்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் கேட்புரை நடைபெறும் என்று அறிவிப்பு 8.8.2016 அன்று தான் தொலைபேசி மூலம் அவருக்கு தெரிவிக்கப்பட்டதால் போதுமான கால அவகாசம் இல்லை என்பதால் மன்றத்தின் கேட்புரையில் கலந்து கொள்ளவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 மன்றம் தன்னுடைய தீர்வை தெரிவிக்கவில்லை என்பதால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

2.3 மனு சமர்ப்பிக்கப்பட்டு 50 நாட்களுக்கும் மேலாக மன்றத்திடமிருந்து பதில் எதுவும் பெறப்படவில்லை என்பதால் மேற்கண்ட மனு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 17(4)(a)ன் படி மேல்முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

3.1 வன்னிக்குடி கிராமத்தில் அடிக்கடி மின்நிறுத்தம் ஏற்பட்டு இருளில் கிராமம் உள்ளது. அங்கு உள்ள மின் மாற்றிகள் அடிக்கடி பழுது ஆவதும் அதை சரி செய்ய பல நேரங்கள்/நாட்கள் ஆகின்றன. இது குறித்து பல புகார்கள் அனுப்பியதை இளநிலை பொறியாளர்/இ&பரா/ அவர்கள் தீர ஆய்வு செய்யாமல் அதற்கு ஒரு மறுப்பு கடிதம் எழுதுவது வழக்கமாகி விட்டது. அவருடைய 096/2015, 21.8.2015 கடிதத்திற்கு மனுதாரர் மறுப்பை இம் மன்றம் முன் தாக்கல் செய்கிறார்.

3.2 மேற்கண்ட அவருடைய கடிதத்தில் மின் நிறுத்தம் என்பது வழக்கமான ஒன்றுதான் என்றாலும் இது குறித்து முன் அறிவிப்பு ஏதும் செய்யப்படுவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு எந்த அறிவிப்பும் இல்லாமல் அடிக்கடி மின் நிறுத்தம் செய்வதை முறைப்படுத்த வேண்டுகிறார்.

3.3 வி.கே–1 என்ற மின் மாற்றி அடிக்கடி பழுது அடைவதை தீர ஆய்வு செய்யாமல் சில நாட்களுக்கு தடைபடுவது தவிர்க்க முடியாத ஒன்றுதான் என்று அனுபவம் வாய்ந்த பொறியாளரின் பதிலை ஏற்க முடியாது. அவருடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ள மின் மாற்றிகள் பராமரிப்பு விபரங்கள் பற்றி ஆய்வு செய்யாமலும் கழகத்தின் படி மின் மாற்றிகளை பரமரிக்கப்படுகின்றதா என்பதை தெளிவு படுத்தாமல் பதில் அளித்தது ஏற்கத்தக்கதல்ல.

மேற்கண்ட வி.கே.–1 மின்மாற்றியை பற்றி ஏற்கனவே அவர் இம்மன்றத்தில் 10.10.2014 புகார் செய்துள்ளார். அது சரி செய்யப்பட்டு சிறு காலம் குறை இல்லாமல் இருந்தது. இப்பொழுது மீண்டும் மின் தடைகள் அடிக்கடி வருவதை இளநிலை பொறியாளர் தடுக்க வழி வகுக்காமல் புகார் கடிதத்திற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். புதிய மின் மாற்றிகள் பொருத்தப்பட்ட சில நாட்கள்/மாதங்களுக்குள் பழுதாவதும் அதை சரி செய்வதும் அதனால் கிராமங்கள் இருளில் மூழ்கின்ற சூழ்நிலை பந்தநல்லூர் இளம் பொறியாளர் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களில் அடிக்கடி நிகழ்வது வழக்கமாகிவிட்டது. ஆனால், அதற்கான அடித்தள காரணத்தை சரி செய்யப்படுகிறதா என்பதை ஆய்வுசெய்ய இம்மன்றம் முன் முறையிடுகிறார்.

3.4 வன்னிக்குடியில் உள்ள மின் மாற்றிகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விதிகள் படி பராமரிப்பு செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய தக்க ஆணை பிறப்பிக்குமாறு இம்மன்றத்தை கேட்டுக் கொள்கிறார். மின்தடை ஏற்படும்பொழுது அதை சரி செய்ய பல மணி நேரம் மற்றும் பல நாட்கள் ஆவதை மின் நுகர்வோர் அறிவர். அதே நேரத்தில் சரியான அசல் உதிரி பாகங்கள் இல்லாமல் தற்காலிகமாக சரி செய்யப்படுவது ஒரு வழக்கமாகி விட்டது. மின்மாற்றிகள் அத்தியாவசியமான பாகங்கள் இருப்பு வைத்திருக்கவேண்டும் என்ற வழிகாட்டுதல் படி பந்தநல்லூர் அலுவலகத்தில் உள்ள இருப்பு புத்தகத்தை ஆய்வு செய்ய வேண்டுகிறார்.

3.5 மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மின் கம்பிகள் மாற்றும் பணி, நெற்குப்பை வரை செய்து விட்டு வன்னிக்குடி கிராமத்தை புறக்கணித்து விட்டனர். அதுபோல் மின் கம்பிகள் பழமை வாய்ந்ததும் அது மட்டுமல்லாமல் மின் கம்பங்கள் சாய்ந்து அபாயகரமான நிலையில் உள்ளன. மின் கம்பிகளுக்கு இடையே பொருத்தப்படும் லைன் செப்பரேட்டர் பொருத்தி காற்றினால் மின் கம்பிகள் ஒன்றுக்கொன்று சேர்ந்து சாட் சர்க்கியூட் ஆகாமல் இருக்க வேண்டுகிறார்

3.6 மேல்முறையீட்டாளரின் வன்னிக்குடி கிராமம், பந்தநல்லூர் மின் அலுவலகத்திலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலையில் உள்ளது. மின் தடை புகார் புத்தகத்தில் மின் தடை பற்றி பதிவு செய்வது பற்றி கிராம மக்களிடையே இன்றும் விழிப்புணர்வு ஏற்படவில்லை. மேலும், அவர்கள் ஒவ்வொரு முறையும் பந்தநல்லூர் வந்து பதிவு செய்வதும் இயலாத காரியம், முன்பு ஊராட்சி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட புகார் புத்தகம் இப்பொழுதும் நிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் பந்த நல்லூர் மின் அலுவலகத்தில் உள்ள மின்தடை புத்தகத்தை ஒப்பிட்டு மின்தடை விபரங்களை கணக்கிட முடியாது. தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் அறிமுகம் செய்த ‘‘ஹலோ போலீஸ்’’ என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணைப்போல் மின்தடை அவசரம் என்ற ஒரு தொலைபேசி எண்ணை உயர்திரு. இம்மன்றத்தின் தலைவர் தஞ்சாவூர் மாவட்ட மேற்பார்வை பொறியாளர் அவர்கள் அறிமுகம் செய்து கிராமப்புறங்களில் மின்சார விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்ய வேண்டுமென இம்மன்றத்தை கேட்டுக் கொண்டுள்ளார். இளநிலை பொறியாளர் அவர்களின் கைபேசிக்கு மிஸ்டு கால் அல்லது எஸ்.எம்.எஸ் செய்தால் அதை பதிவு செய்து அதன் மேல் அவர் நடவடிக்கை எடுக்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தலாம் எனவும் தெரிவித்துக் கொள்கிறார்.

3.7 வன்னிக்குடியில் உள்ள மின் மாற்றிகள் அருகே மூங்கில் தென்னை மற்றும் பெரிய மரங்கள் உள்ளதால் காற்றில் அதன் கிளைகள் மின் கம்பிகளை தொட்டு அடிக்கடி ஷாட் சர்க்கியூட் ஆகின்றது. மின் மாற்றிகள் சுற்றி பாதுகாப்பு வேலிகள் இல்லாததால் சில நேரங்களில் களப்பணியாளர்களுக்கு தெரியாமல் கிராம மக்களே தாங்களே மின் மாற்றியில் ஏறி பழுது பார்ப்பதும் வழக்கமாக ஆகிவிட்டது. ஆதலால் மின் மாற்றியை சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்து அறிவிப்பு மற்றும் விழிப்புணர்வு பதாகையை அமைக்க இம்மன்றத்தின் முன் வேண்டுகிறார்.

3.8 வன்னிக்குடியில் உள்ள இலவச விவசாய மின்இணைப்பு நுகர்வோர் பலர் இரண்டு பேஸ் மூலம் தங்கள் ஆழ்கிணறு பம்ப்செட் மோட்டார்களை இயக்கி தங்கள் தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். ஆனால், இதனால் தான் மின்மாற்றி அடிக்கடி பழுது அடைவதை அவர்கள் அறிவதில்லை அடிக்கடி மின்தடை ஏற்படுவது சரியான பராமரிப்பு இல்லாததது ஒரு காரணம். சுமார் 3 ஆண்டுகளுக்கு மேல் பந்தநல்லூர் அலுவலகத்தில் இளநிலை பொறியாளர் பதவி காலியாக இருந்து 24.12.2015 அன்று தான் தற்பொழுது உள்ள புதிய இளநிலை பொறியாளர் பதவியேற்றார். ஆனால், அவர் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மின் மாற்றிக்கும் வரும் மின்பாதை மற்றும் அதன் மூலம் விநியோகம் ஆகும் இணைப்புகளை அவர் இன்னும் சரியாக ஆய்வுசெய்ய இயலாதது வேலை பழுவின் காரணமாகத்தான் இருக்க முடியும். ஆதலால் இடம் மற்றும் முழுமையான ஆய்வு செய்து அவற்றை சரி செய்ய வேண்டுகிறார்.

3.9 பந்தநல்லூர் அலுவலகத்திற்கு தேவைப்படும் களப்பணியாளர்களை எவ்வளவு என்றும் அதற்கேற்ப இப்பொழுது பணியாற்றும் களப்பணியாளர்கள் போதுமானதா என்பதை தாங்கள் அறிந்து தக்க ஆணை பிறப்பிக்குமாறு இம்மன்றம் முன் வேண்டுகிறார்.

3.10 உயர்திரு செயற்பொறியாளர் அவர்கள் மாதம் ஒரு முறை தாங்கள் கும்பகோணத்தில் நடத்தும் குறைதீர் கூட்டத்தை ஒருமுறை அவர்கள் கிராமத்தில் நடத்த வேண்டுகிறார். விவசாய கிராம மக்கள் நுகர்வோர்கள் கும்பகோணம் வந்து குறிப்பிட்ட தேதியில் அங்கு வந்து தங்கள் குறைகளை நேரில் பதிவு செய்ய அவர்களின் வசதிக்கு முடியாத காரணம். இளநிலை பொறியாளர் தலைமையில் குறைதீர் கூட்டம் கிராமம் வாரியாக நடத்த தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறார். அப்பொழுதுதான் கிராம மக்களின் குறைகளை நன்கு அறிய வாய்ப்புள்ளது.

## 4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

4.1 தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக மின்கட்டமைப்பில் ஏற்படும் மின்தடையை தவிர மற்ற நேரங்களில் வன்னிக்குடி பகுதியில் மின்நிறுத்தம் எதுவும் செய்யப்படவில்லை. மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

4.2 மின் நிறுத்தம் பற்றிய தகவலை செய்தி தாள்கள் மூலமாகவும் மற்றும் ஊடகங்கள் வழியாகவும் தெரிவிக்கப்படுகிறது.

4.3 வி–கே–1 என்ற மின்மாற்றி சரியான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதிலிருந்து தடையில்லா மின்சாரம் நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதை அந்த மின்மாற்றியில் உள்ள மற்ற மின்நுகர்வோர் உறுதி செய்து உள்ளனர். இந்த நிலையில் வாதி இவ்வாறு கூறுவது ஏற்புடையது இல்லை.

4.4 பந்தநல்லூர் பிரிவில் மின்தளவாடப்பொருட்கள் தேவையான அளவு இருப்பு வைத்து மின்பாதையில் மின்தடங்கல் ஏற்படும்பொழுது உடனுக்குடன் மின்ஊழியரை கொண்டு சரிசெய்யப்படுகிறது. இது தொடர்பாக எந்த மின் நுகர்வோரிடமிருந்தும் எந்த புகாரும் பந்தநல்லூர் பிரிவு அலுவலகத்திற்கு வராத சூழ்நிலைக்கு வாதி இவ்வாறு முறையிடுவது ஏற்று கொள்ளதக்கதல்ல.

4.5 மின்பாதையில் மின்கம்பி தேவையான அளவு தேவையான தூரத்திற்கு மாற்றப்பட்டது. மீண்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேவை ஏனில் மீதம் உள்ள மின்பாதையில் கம்பி மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், line separator பல இடங்களில் பொருத்தப்பட்டுள்ளது. வாதி இடத்தினை குறிப்பிடாமல் பொதுவாக கூறி உள்ளார். இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு தேவையான இடங்களில் அமைக்கப்படும் மேலும் வன்னிக்குடி கிராமத்திற்கு மட்டும் மின்கம்பியை மாற்றவில்லை என வாதி கூறுவது ஏற்புடையது அல்ல.

4.6 பந்தநல்லூர் பிரிவு அலுவலகத்தில் புகார் புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. மேலும், முன்பு ஊராட்சி மன்றத்தில் புகார் புத்தகம் இருந்தது என்பது அப்பொழுது கைபேசி வசதி இல்லாத நிலை இப்பொழுது அது தேவையற்றது அனைத்து மின் நுகர்வோரிடம் கைபேசி வசதி உள்ளது. அதில் பிரிவு அலுவலரை தொடர்பு கொண்டு தங்களுடைய புகாரை தெரிவிக்கலாம். மேலும், வன்னிக்குடி என்பது பந்தநல்லூர் பிரிவு அலுவலகத்திலிருந்து 5. கி.மி. தொலைவில் உள்ளது. இந்த நிலையில் வாதி கூறும் கருத்துரை ஏற்புடையதல்ல.

4.7 பந்தநல்லூர் பிரிவிற்குப்ட்ட அனைத்து மின்பாதைகளிலும் உள்ள மரங்கள் அகற்றப்பட்டு மின்பாதை சரிவர பராமரிக்கப்படுகிறது. மேலும், வாதி கூறுவது போல் அனைத்து மின்மாற்றிகளுக்கும் தடுப்புவேலி அமைப்பது என்பது சிரமமான செயல் இருந்தபொழுதும் தக்க அனுமதி பெற்று மின்வேலி அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும். மின்நுகர்வோர் யாருக்கும் மின்மாற்றியில் ஏறி பழுது பார்க்க அனுமதி வழங்கப்படவில்லை.

4.8 இலவச விவசாய மின் இணைப்பில் யாருக்கும் 2 Phaseல் மின் மோட்டார் இயக்குவதற்கு எந்த அனுமதியும் மின்சார வாரிய அலுவலரால் வழங்கப்படவில்லை.அதற்கு அதிகாரமும் இல்லை. ஆனால் இதுவேண்டி புகார் எதுவும் பந்தநல்லூர் பிரிவு அலுவலகத்தில் பதியப்படவில்லை. வாதி பொதுவாக தெரிவிக்காமல் குறிப்பிட்ட மின்இணைப்பில் மேற்கண்ட குறையை தெரிவித்தால் வாரிய விதியின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

4.9 பந்தநல்லூர் பிரிவு அலுவலகத்தில் உள்ள பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை பணியிடங்கள் 17 பணியில்இருப்பது 6 காலியிடம் 11.

4.10 குறைத்தீர்ப்பு மன்றத்தில் தலைவர் மேற்பார்வை பொறியாளர்/தஞ்சை மின்பகிர்மான வட்டம் அவர்கள் தான் அவர் தலைமையில் கும்பகோணம் ராஜன் தோட்டத்தில் மின் நுகர்வோர் குறைதீர்ப்பு கூட்ட மாதம் ஒரு முறை நடத்தப்படுகிறது. வாதி கோரிய படி இளநிலை பொறியாளர் தலைமையில் குறைதீர்ப்பு கூட்டம் நடத்த வாரிய விதிப்படி அவருக்கு அதிகாரம்

இல்லை. ஆனால், அவர் பந்தநல்லூர் பிரிவு அலுவலகத்தில் அனைத்து பணிநாட்களிலும் காலை 9 மணியிலிருந்து 12 மணி வரை விண்ணப்பம் மற்றும் மின்நுகர்வோர் கோரிக்கை மனு பெறுவதற்காக பிரிவு அலுவலகத்தில் இருப்பார் என்ற விபரம் அறிவிப்பு பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரைக்கு மேல்முறையீட்டாளரின் மறுப்புரை (Rejoinder)</u>

5.1 The Respondents can show some of the News Paper Cuttings indicating the Power Cut Notices as mentioned in their counter .No such information is given to public

5.2 He had experienced the Frequent Power Failures in several occasions where he stayed there for more than 10 days in a month.

5.3 He states that there is no effective fuse call off system operated down the lane in the remote villages like Vannikudi.

5.4 Now the one Electric lines passing through a single post in the middle of our land in 16/2 is an additional Electric line which can be linked with the new electric lines going along the new roads and reaching the colonies. Hence, the old electric lines can be removed.

5.5 The Respondents have not given a detailed report on the replacement of the Electric cables It is a fact that the Electric cables were changed up to Neikuppai and thereafter it was changed further and more particularly Vannikudi village was not Changed .The respondents failed to mention whether the Electric Cables were replaced in Vannikudi.

5.6 He states that his complaint pertains to Vannikudi Village only and there is no Line separators fitted.

5.7 He states that the suggestion for improving the Fuse of call system was made to the CGRF/Electricity Ombudsman .It is a feedback from a Consumer .The Complaint Register available in Pandanallur office does contain the calls received through Cell phones and there is no system to monitor the Performance of the team.

5.8 He states that as he has already mentioned the Vannikudi Village is about 5 Km from the Pandanallur Office hence there are practical difficulties and the Respondents may come out before the Honourable Ombudsman to find a solution.

5.9 He states that the Transformer Fencing/ is an important one in villages where it is exposed to a lot of risk for human lives and Cattles . Even though there is no permission granted by Corporation ,in the event of failures, the local electricians and other do try to set right the Transformer Fault within an intention to restore the Power Supply .This can be prevented if Barricades are available with doors.

5.10 He states that the Respondents have not expressed the situation to the hon'ble Electricity Ombudsman about the use age of Motors in Two Phase Current .It is a fact that 90 % of the Consumers are operating on two phase current without knowing the other related problems .They are forced to operate to opt with the power cut situatlon.The respondents have not taken a concrete step to find permanent solution.

5.11 He states that as per the statement of the Respondents with the 50% of the total strength available it is not practically possible to achieve efficiency in Customer Service as stated by the Respondents . Hence the Respondents has to seek all assistances through this Forum.

5.12 He states that the Respondents have not come out with the difficulties and the problem they are facing regarding the frequent failures and other drawbacks in Vannikudi inspite of adequate Transformers and they have defended my Grievances through the Counter Statement.

5.13 He Humbly request the Hon'ble Electricity Ombudsman to appoint an Advocate Commissioner or an Export Team to study and give a report on the lapses and drawbacks in the interest of improving the Services and pass such orders that may deem fit and thus render justice.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**6.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.2.2017 அன்று நடத்தப்பட்டது.

**6.2** மேல்முறையீட்டாளர் திரு. ஆர். வெங்கட்ராமன் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**6.3** எதிர்மனுதாரர்–1 திரு. கலியாணசுந்தரம், இளநிலை பொறியாளர்/பந்தநல்லூர் அவர்களும் எதிர்மனுதாரர்–2 திரு. C. இளஞ்செல்வன் உதவி செயற்பொறியாளர்/வடக்கு/கும்பகோணம் அவர்கள் தன்னுடைய சார்பாகவும், எதிர்மனுதாரர்–3 செயற்பொறியாளர்/கும்பகோணம்/வடக்கு சார்பாகவும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய கிராமத்திற்கு கொடுக்கப்படும் மின்சாரம் பற்றி குறைகளைத்தான் தெரிவிப்பதாகவும் அங்குள்ள மின்சார வாரியத்தின் அலுவலர்கள் மீது குறை எதுவும் சொல்லவில்லை என்றும் அவரின் கிராமத்திற்கு மின்சாரம் சரியான முறையில் கிடைக்க வேண்டும் என்பதுதான் அவரின் மனுவின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

7.3 அவருடைய கிராமத்தில் 5 முதல் 6 மணி நேரம் வரை மின்சாரம் தினமும் இல்லை என்று தெரிவித்தார்.

7.4 அவருடைய கிராமத்தில் குறைந்த மின் அழுத்தத்தில்தான் மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று வாதிட்டார்.

7.5 விவசாய மின் இணைப்புகள் இருமுனை மின்சாரம் இருக்கும் பொழுதும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால், அதுதவறு என்று அவ்வாறு உபயோகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் எதிர்மனுதாரர்களால் எடுக்கப்படவில்லை என்று வாதிட்டார்.

7.6 மின்மாற்றி பழுதானால் சுமார் 15 நாட்கள் கழித்துதான் மாற்றப்படுகின்றன என்றும், அதுவரை மின்சாரம் தடைபடுகிறது என்றும் தெரிவித்தார்.

7.7 மின்மாற்றியை சுற்றி வேலி அமைக்கவில்லை என்பதால் பாதுகாப்பு குறைகிறது என்றும், கிராமத்தில் உள்ள பொதுமக்களே மின்மாற்றியில் FUSE மற்றும் பழுதுகளை நீக்குகிறார்கள் என்றும் அது மின்சார வேலையை அதிகாரமில்லாத சாதாரண மனிதன் செய்யும்நிலை ஏற்படுகிறது. எனவே, வேலி அவசியம் என்று வாதிட்டார்

7.8 Break Down ஏற்பட்டால், உடனே அவைகளை சரிசெய்ய போதுமான தளவாட சாமான்களும் ஆட்களும் அலுவலகத்தில் இல்லை என்றும் வாதிட்டார்.

7.9 மின்தடங்களில் உள்ள மூங்கில் போன்ற மரங்களை வெட்டி மின்தடங்களை சீராக வைக்கவில்லை என்றும் வாதிட்டார்

7.10 மேலும், அவரின் கிராமத்தில் fuse of call register எதுவும் வைக்கப்படவில்லை என்றும் fuse of callஐ பதிவு செய்ய SMS மூலம் பதிவு அல்லது அதற்கான பிரத்யேக தொலைபேசி எண் போன்ற தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர்–2 தங்களுடைய பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 கிராமத்தில் 5 முதல் 6 மணி நேரம் மின்சாரம் இல்லை என்பதை மறுத்தார். மின்கட்டமைப்பில் ஏற்படும் தடையை தவிர வேறு தடைகள் இல்லை என்றார்.

8.3 மேலும், குறைந்த மின் அழுத்தம் உள்ள நுகர்வோர்கள் மின் வாரியத்திற்கு தகவல் தெரிவித்தால் வாரிய விதிகளின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதிட்டார்

8.4 மூன்று முனை மின்சாரம் வழங்கும் பொழுது மட்டும்தான் விவசாய மின் இணைப்புகள் இயக்கப்படவேண்டும் என்றும் இருமுனை இணைப்பில் மின்மோட்டாரை இயக்க யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவ்வாறு உபயோகப்படுத்தும் நுகர்வோர்களை பற்றிய தகவல் தரப்பட்டால் அந்த மின்இணைப்புகளின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதிட்டார்.

8.5 மின்மாற்றி பழுதான உடனேயே நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் 15 நாட்கள் கழித்த பழுதடைந்த மின்மாற்றி மாற்றப்பட்டது தவறு என்றும் வாதிட்டார். 23.7.2015ல் பழுதான வி.கே–1 என்ற மின்மாற்றி 27.7.2015ல் மாற்றப்பட்டது என்றும் 15.2.2017ல் பழுதான வி.கே–III என்ற மின்மாற்றி 21.2.2017ல் மாற்றப்பட்டது என்றும் வாதிட்டார் மேலும், வன்னிக்குடி பகுதியில் உள்ள 11 மின்மாற்றிகளில் வேறு எந்த மின்மாற்றியும் சமீப காலத்தில் பழுதாகவில்லை என்றும் வாதிட்டார்.

8.6 அனைத்து மின்மாற்றிகளுக்கு மின்வேலியமைப்பது என்பது சிரமமான செயல் ஆகும். இருந்தபோதிலும் தேவையான இடங்களில் வாரியத்தின் அனுமதி பெற்று வேலியமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

8.7 மின்வாரிய அலுவலர்களை தவிர வேறு எவரும் மின்மாற்றியிலோ அல்லது மின்கம்பத்திலோ மின்தடத்திலோ ஏற்படும் பழுதுகளை நீக்க அதிகாரம் படைத்தவர்கள் அல்ல. அவ்வாறு புகார் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதிட்டார்.

8.8 மின்தடங்கல் ஏற்பட்டால் உடனுக்குடன் மின் ஊழியர்களை கொண்டு தடங்கல் சரி செய்யப்படுகிறது. அதில் தாமதம் ஏற்பட்டால் உரிய பிரிவு அலுவலர் உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் ஆகியோரிடம் தெரிவித்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்

8.9 கைபேசி வசதியில்லாத காலத்தில் ஊராட்சி அலுவலகத்தில் புகார் புத்தகம் வைக்கப்பட்டு இருந்தது. தற்பொழுது மின்தடங்கல் போன்ற தகவல்களை பிரிவு அலுவலரிடம் தெரிவித்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

8.10 மேலும், மேல்முறையீட்டாளர் பொதுவாக குறைகளை தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பாக நுகர்வோரின் மின்இணைப்பில் உள்ள குறைகளை தெரிவித்தால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதிட்டார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பில் உள்ள மின்சேவை குறைபாடுகள் பற்றிய முறையீட்டை சமர்ப்பிக்கவில்லை. அவருடைய கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதில் உள்ள பொதுவான குறைபாடுகளை தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட குறைகள் அவரும் நுகர்வோர் என்ற

முறையில் அனுபவிப்பதால் அக்குறைபாடுகளை நீக்குவது பற்றி அவருடைய கிராமத்திற்கு வழங்கபடும் மின்சாரம் மற்றும் அதைசார்ந்த சேவைகளின் தரம் உயர்த்தப்படவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

**9.2** இங்கு மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பின் குறிப்பிட்ட (specific complaints) குறைகளை தெரிவிக்காமல் பொதுவாக அவரின் கிராமத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்தில்/மின்சார சேவைகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டியுள்ளதால் இந்த மேல்முறையீட்டாளரை முறையீட்டாளர் என்று எடுத்து கொள்ள முடியுமா? என்பதை ஆராய வேண்டும்.

**9.3** எனவே, மின்சார குறைதீர்மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 2(உ)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“2(உ) "முறையீட்டாளர்” என்பது:–*

*(i) புதிய இணைப்புக்கான மனுதாரர்களை உள்ளடக்கிய பகிர்வு உரிமம் பெற்றவரால் மின்சாரம் வழங்கப்பட்ட நுகர்வோர்;*

*(ii) நிறுமச்சட்டம், 1956 (1956 ல் 1) அல்லது தற்போது நடைமுறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு தன்னார்வ கூட்டமைப்பு ;*

*(iii) முறையீடு செய்த மைய அரசு அல்லது மாநில அரசு;*

*(iv) ஒரே அக்கரை கொண்ட அதிகப்படியான நுகர்வோர் இருக்கும்போது, ஒருவரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரோ ;*

*(V) நுகர்வோர் இறந்திருந்தால், அவரது சட்டப்படியான வாரிசுதாரர்கள் அல்லது சார்பாளர்கள்;*

**9.4** மேற்கண்ட விதியின்படி 2(உ)(iv)ன் படி ஒரே அக்கரைகொண்ட அதிகப்படியான நுகர்வோர் இருக்கும்பொழுது ஒருவரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவரோ முறையீட்டாளர் என்று வகைப்படுத்தப்படுவர் என்று தெரிகிறது.

**9.5** இந்த மேல்முறையீட்டாளர் அவர் வன்னிக்குடி கிராமத்தில் ஒரு நுகர்வோர் என்றும் அந்த கிராமத்திற்கு கொடுக்கப்படும் மின்சார பணிகளிலுள்ள எல்லாருக்கும் பொதுவாக உள்ள

குறைகளை எடுத்துரைப்பதால் அவர் முறையீட்டாளர் என்ற விளக்கத்திற்குள் உள்ளார் என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.6 மேல்முறையீட்டாளர் கீழ்கண்ட குறைகள் வன்னிக்குடி கிராமத்தில் உள்ளது என்று தன்னுடைய முறையீட்டில் பட்டியலிட்டுள்ளார்.

(1) மின்நிறுத்தம்/மின்தடை அடிக்கடி ஏற்படுகிறது. மேலும், தினம் 4 முதல் 6 மணி நேரம் வரை மின்தடை உள்ளது என்றும் மின்தடை சம்பந்தமாக முன் அறிவிப்புகள் செய்யப்படுவதில்லை.

(2) வன்னிக்குடியில் மின்மாற்றிகள் அடிக்கடி பழுதாகின்றன. பழுதான மின்மாற்றியை மாற்றுவதற்கு வரையறுக்கப்பட்ட நாட்களைவிட அதிக நாட்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மேலும், மின்மாற்றிகளின் பராமரிப்பு பணி சரியாக நடைபெறுகின்றதா என்பதை ஆராய வேண்டும்.

(3) மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அவர்கள் கிராமத்தில் பழைமை வாய்ந்த மின்கம்பிகள் மாற்றம் சாய்ந்த மின்கம்பங்களை சரிபடுத்துதல் மின்கம்பிகளுக்கு இடையில் line separator மாட்டுதல் ஆகிய பணிகள் நடைபெறவில்லை.

(4) ஊராட்சி மன்றத்தில் மின்தடைபற்றி பதிவு செய்யும் புத்தகம் இருந்தது. தற்பொழுது அது நிறுத்தப்பட்டுள்ளது. மின்தடை பதிவு SMSல் மூலமாக கட்டணமில்லாத தொலைபேசி மூலம் என்று மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

(5) மின்பாதையிலுள்ள மரங்களின் கிளைகளை அப்புறப்படுத்துதல், மின்மாற்றிகளுக்கு வேலி அமைத்தல் மின்மாற்றிகளில் விழிப்புணர்வு பதாகை அமைத்தல் வேண்டும். மின்மாற்றியில் அதிகாரமற்றோர் fuse மாற்றம் மற்றும் பழுது நீக்குவது போன்ற பணிகள் செய்யப்படுவது தடைப்படுத்தவேண்டும்.

(6) இரண்டு முனை மின்சாரம் இருக்கும்பொழுது மும்முனை விவசாய மின்இணைப்புகள் இயக்கப்படுவதை கட்டுப்படுத்தல் வேண்டும்.

(7) மாதம் தோரும் செயற்பொறியாளர் அலுவலகத்தில் குறைதீர்மன்ற கூட்டத்தை நடத்துவதற்கு பதிலாக ஒவ்வொரு கிராமத்தில் குறைதீர்க்கும் கூட்டத்தை நடத்துதல் வேண்டும்.

9.7 மேற்கண்ட குறைகள் வன்னிக்குடி கிராமத்தின் பொதுக்குறைகள் என்றும் அவற்றை நீக்குவதற்கு அட்வகேட் கமிஷனர் நியமிக்கப்பட்டு அல்லது வல்லுநர் குழு உருவாக்கப்பட்டு அவர்களின் அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

9.8 இங்கு ஒரு கிராமத்திற்கு அளிக்கப்படும் மின்வழங்கலில் உள்ள பொதுவான குறைகள் அவர்களுள் ஒருவரான நுகர்வோரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எனவே, மேற்பார்வை பொறியாளர், தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கும்பகோணம் வடக்கு கோட்டத்தை தவிர மற்ற கோட்டத்திலிருந்து உதவி செயற்பொறியாளர் பதவிக்கு குறையாத ஒரு பொறியாளரை நியமித்து அவரின் கோரிக்கை மனுவிலுள்ள அனைத்து கோரிக்கைகளையும் கள நிலவரத்தையும், விதிகளையும் ஆராய்ந்து அறிக்கை பெறவேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது. மேலும், மேற்கண்ட பொறியாளரின் அறிக்கையின்படி மேற்கண்ட கோரிக்கைகளுக்கான தேவையான நடவடிக்கை விதிகளின்படி அதாவது மின் வழங்கல் விதி, பகிர்மான விதி மற்றும் மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான விதிகளுக்கிணங்க எடுக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 10 <u>முடிவுரை</u>

10.1 மேற்கண்ட பத்தி 9ன் படி மேற்பார்வை பொறியாளர், தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் கும்பகோணம் வடக்கு கோட்டத்தை தவிர மற்ற கோட்டத்திலிருந்து உதவி செயற்பொறியாளரின் பதவிக்கு குறையாத ஒரு பொறியாளரை நியமித்து அவரின் கோரிக்கை மனுவிலுள்ள அனைத்து கோரிக்கைகளையும் கள நிலவரத்தையும், விதிகளையும் ஆராய்ந்து அறிக்கை பெறவேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது. மேலும், மேற்கண்ட பொறியாளரின்

அறிக்கையின்படி மேற்கண்ட கோரிக்கைகளுக்கான தேவையான நடவடிக்கைகளை மின் வழங்கல் விதி, மின் பகிர்மான விதி மற்றும் மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க எடுக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.2** மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியது சம்பந்தமான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற **60** நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

**10.3** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.**96/2016** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

**1)** திரு. R. வெங்கட்ராமன்,
த/பெ ராஜகோபால்,
R.V.R. பண்ணை,
R.V.R. இல்லம்,
**1,2** & **3**, திருமலை தெரு, ஜெய் பாலாஜி நகர்,
கே.கே. நகர், சென்னை – **600 078.**

**2)** உதவி பொறியாளர் / இ & ப / பந்தநல்லூர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**1/11**, மெயின் ரோடு, காவானூர்,
பந்த நல்லூர் – **609 802.**

**3)** உதவி செயற் பொறியாளர் / இ & ப /வடக்கு/கும்பகோணம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திரவிடை மருதூர் சாலை, ராஜன் தோட்டம்,
கும்பகோணம் – **612 001.**

**4)** செயற் பொறியாளர் / இ & ப /வடக்கு/கும்பகோணம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருவிடை மருதூர் சாலை, ராஜன் தோட்டம்,
கும்பகோணம் – **612 001.**

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர் )
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு,
தஞ்சாவூர் – 613 007.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.